யின் முதற் றொகுதியிலே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விரண்டு கடிதங்களையும், சுவாமிகளின் அனுமதிபெற்று, யாம் இந்நூலின் இறுதியில் அநுபந்தமாகச் சேர்த்திருக்கின்றோம். அக்கடிதங்களிலும் அநேக அரிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையில் உயர்வகுப்புத் தமிழ்ப் போதகாசிரியராய்ச் சுமார் பதினைந்து வருடகால மிருந்தவர்களும் "சைவசித்தாந்த மகாசமாஜம்" என்னும் மகாசபையை இற்றைக்கு ஒன்பது வருடங்கட்கு முன்பு ஸ்தாபித்தவர்களும், "ஞானசாகரம்" என்னும் அரிய தமிழ் மாதப் பத்திரிகைக்கும், "ஓரியண்டல் மிஸ்டிக் மைனு" என்னும் ஆங்கில மாதப் பத்திரிகைக்கும் ஆசிரியராயிருந்து அவைகளை நடாத்தி உலகுக்கு உபகரித்து வருகின்றவர்களுமான ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசல மவர்களால் சென்னைக்குச் சமீபத்திலுள்ள பல்லாவரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் "சமரச சன்மார்க்க நிலையம்" என்னுந் திருக்கழகத்திற்கு இப்புத்தக விற்பனையாற் கிடைக்கும் வருவாயின் பெரும்பகுதி எம்மால் உதவப்படு மாகையால், தமிழ் அபிமானிகள் இப்புத்தகத்தை அன்புடன் ஏற்று ஆதரிக்கவேண்டுமென யாம் அவர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இந்நூலை அழகாயும் சுத்தமாயும் அச்சியற்றிக் கொடுத்த சென்னை வைஜயந்தி அச்சியந்திர சாலையாருக்கு யாம் எமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றோம். யாம் மேற்கொள்ளும் இத்தகைய முயற்சிகளை இனிது நிறைவேற்றி வைக்கும் எல்லாம்வல்ல சிவபெருமான் திருவருளைப் பெரிதும் பாராட்டி, அவரை மனமொழி மெய்களால் முறையே சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றோம். சுபம்!

தேவகோட்டை,<br>15-12-1914.

நாகை - ஸி. கோபாலகிருஷ்ணன்,<br>பதிப்பாசிரியன்.

னையும் ஐந்து கூறுபடப் பகுக்குங்காற் குற்றெழுத் தைந்துந் தமக்குரிய இனநெடிலோ டியைந்து நிற்ப ஐகாரவுயிர் இகரத்தினையும் ஔகாரவுயிர் உகரத்தினையுஞ் சேர்ந்து நிற்குமெனக் கூறுப. இதனை வச்சணந்தி நூலுடையார்,

"குறிலைந்துந் தந்நெடில்கொண் டிஉ ஐ ஔசேர்ந்
தறிபால னாதியா வைந்து—மிறைவன்பேர்
முன்னெழுத்துப் பாலனில்வைத் தெண்ணிமூப் பேமரண
மென்னுமிவை தீதென்றே யெண்"

என்று தெளிய வெடுத்துக் கூறுதலானு முணர்ந்து கொள்க. இவற்றைப் பகுத்துங் காட்டுவோம்,

| | | | | |
|---|---|---|---|---|
| அ ஆ | இ ஈ ஐ | உ ஊ ஔ | எ ஏ | ஒ ஓ |
| 1 | 2 | 3 | 4 | 5 |

இவற்றுள் இறைவன் பெயர் அகர ஆகாரமாயின் முதன் மூன்று தானங்களினு முள்ள உயிரெழுத்துக்களை முதலாகவுடைய மங்களச்சொற் றொடங்க நன்றாம்; இறைவன் பெயர் இகர ஈகார ஐகாரங்களாயின் அப்பகுதி முதன், மூன்று தானங்களு நன்றாம்; உகார ஊகார ஔகாரங்களாயின் அக்கூறு முதன், மூன்று தானங்களு நன்றாம்; எகர ஏகாரங்களாயின் அது முதன் மூன்று நன்றாம்; ஒகர ஓகாரங்களாயி னது முதன் மூன்று நன்றாம். இனி, **சோமசுந்தரதரவன்** என்னும் பாட்டுடைத் தலைவன் பெயர் முதலெழுத்து ஓகாரமாகலான் அதற்கு மூன்றாந் தானத்தி லிருப்பதாகிய ஐகாரவுயிர் அரசத்தான மாவதன்றி நீர் குழறியவாறு மரணத் தான மாமாறு யாங்ஙனம்? இதனை யறியாது நூலவறிவான் மயங்கிக் கூறிய நுமக்கு இன்னுஞ் சிறிது புலனுமாறு பகுத்துக் காட்டுதும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பாலன் - | குமரன் - | அரசன் - | மூப்பு - | மரணம். |
| ஒ ஓ | அ ஆ | இ ஈ ஐ | உ ஊ ஔ | எ ஏ |
| 1 | 2 | 3 | 4 | 5 |

இங்ஙனம் பகுத்துக் காட்டிய வாற்றாற் **சோ** வென்னும் பாட்டுடைத் தலைவன் பெயர் முதலெழுத்திலுள்ள ஓகார வுயிருக்குச் சைவம் என்னும் மங்கல மொழிமுதற் சை என்னு மெழுத்திலுள்ள ஐகாரவுயிர் அரசத் தானத்தி னின்றமை விளங்க வறிந்து கொள்ளக்

## சுவாமி வேதாசலம்

# இயற்றிய தமிழ் நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| பட்டினப்பாலை ஆராய்ச்சி ... ... ... | 1 | 0 | 0 |
| குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி* ... ... ... | 0 | 12 | 0 |
| மலைபடுகடாம் ஆராய்ச்சி* ... ... .. | 0 | 12 | 0 |
| முல்லைப்பாட்டு ஆராய்ச்சி ... ... ... | 0 | 8 | 0 |
| சாகுந்தலம் (நாடகம்) ... ... ... | 1 | 0 | 0 |
| குமுதவல்லி (நாவல்) ... ... ... | 0 | 8 | 0 |
| சிந்தனைக் கட்டுரைகள் ... ... ... | 0 | 8 | 0 |
| பண்டைக்காலத்தமிழர் ஆரியர் ... ... ... | 0 | 10 | 0 |
| முன்பனிக்கால உபந்நியாசங்கள் ... ... | 1 | 0 | 0 |
| திருவொற்றிமுருகர்மும்மணிக்கோவை* (மிகத்தெளிவான உரையுடன்) ... ... ... | 1 | 0 | 0 |
| ஞானசூரியபோத உரை* (2-ம் பதிப்பு) ... ... | 0 | 8 | 0 |
| மூதற்குறள்வாத நிராகரணம்* (2-ம் பதிப்பு) ... | 0 | 8 | 0 |

குறிப்பு :—*இக்குறியிடப்பட்டுள்ள புத்தகங்கள் அச்சிலிருக்கின்றன; மற்றப் புத்தகங்கள் வேண்டுவோர் "ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள், 'சமரச சன்மார்க்க நிலையம்', பல்லாவரம்" என்னும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

